# சோழர்கால ஆடற் சிற்பங்கள்
# Chola Period Dance Sculptures

துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ் / Thushyanthy Juliyan Jeyapragash[1]

Date of submission: 2025-12-13
Date of acceptance: 2025-12-122
Date of Publication: 2025-12-30
Corresponding author's Name:
Thushyanthy Juliyan Jeyapragash
Email: julithushy@gmail.com

**Abstract**

The Chola period (9th-13th century AD) is considered the pinnacle of Tamil art history. Specifically, dance sculptures stand as excellent symbols of Chola artistic wealth. These sculptures are not merely art objects but also documents reflecting religious devotion, literary tradition, drama-dance scriptures, and social life. The basic elements of Bharatanatyam (angas, karanas, anga shuddhi, facial expressions) are vividly designed in these sculptures. Dance forms like Nataraja, Sivakami, Karana Moorthies, and Devadasis hold a special place in Chola temples. The dance sculptures found in sacred places like Chidambaram, Thanjavur, Gangaikonda Cholapuram, and Tiruvarur showcase the technical skill and aesthetic thinking of the Chola sculptors. This study examines the background of the creation of Chola period dance sculptures, literary sources, connection to dance grammar, religious significance, and social role. Furthermore, these sculptures are compared and studied with texts such as Silappatikaram, Tevaram, and Bharata Muni's Natya Shastra. Through this, the article explains that Chola period dance sculptures are an integrated expression of Tamil culture.

**Keywords:** Chola Period, Dance Sculptures, Nataraja, Karanas, Nāṭyaśāstra, Bharatanatyam, Devadasi Tradition, Temple Art, Religious Iconography, Tamil Culture

## அறிமுகம்

மனிதன் இயற்கையிலிருந்தும் சூழலில் இருந்தும் தான் பெற்ற அனுபவத்தை தனக்கு கைவந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்துவதே கலைகள் ஆகும். கலை உலகப் பொதுவானது. அவை எங்கும் வியாபித்துள்ளது. கலை மகிழ்ச்சிக்கும் அறிவை மேம்மடுத்துவதற்கும் உதவுகின்ற ஓர் சாதனமாகும். கலையில் மனித முயற்சி முக்கியமாகின்றது. மனிதன் இல்லையானால் இயற்கை ஓர் உயர்ந்த சடப்பொருள் ஆகிவிடும். மனிதன் தனது புலன் உணர்வுகளால் தன்னைச் சூழவுள்ள புற உணர்வை அறிகின்றான். நடைமுறையில் பல அனுபவங்களைப் பெறுகின்றான். இவற்றை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்துகையில் அங்கு கலை உருவாகின்றது.

கண்ணைக் கவரும் நடனத்திற்கும் சிற்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பார்ப்பவர்கள் மனதில் இரஸாநுபவம் தோன்றும் பொருட்டு அபிநயங்கள் எவ்வாறு நடனத்திற்கு இன்றியமையா சாதனங்களாய் இருக்கின்றனவோ அவ்வாறே அவை சிற்பத்திற்கும் இன்றியமையாதனவாகின்றன பொதுவாக சிற்ப ஓவிய வடிவங்கள் அபிநயச் சிறப்புப் பொருந்தவே அமைக்கப்படுகின்றன. நாட்டியக்கலையினிடமிருந்தே சிற்பக்கலை பல

[1]The author is a Senior Lecturer, Department of Dance, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka, julithushy@gmail.com

சிறந்த இயல்புகளைப் பெற்றிருக்கின்றது. பரதநாட்டியத்திற்கு உதாரணமாக இன்றும் நாட்டின் கண் இருப்பன ஆலயங்களில் காணப்படும் சிற்ப உருவங்களே ஆகும். தொன்றுதொட்டு வளர்ந்து வருகின்ற ஆடற்கலையானது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து தற்காலம் வரை வளர்ச்சியுற்று வருவதற்கு சங்ககாலம் தொடக்கம் விஜயநகர காலங்களில் காணப்பட்ட ஆடற்சிற்பங்களும் ஒரு சான்றாக அமைகின்றன. இந்தியக் கலை வரலாற்றில் சோழர்கள் சிற்பக் கலைக்கு வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. கல் மற்றும் வெண்கலச் சிற்பங்களில் அவர்கள் அடைந்த உச்சநிலை, குறிப்பாக ஆடல் சார்ந்த சிற்பங்களில் தெளிவாகக் காணப்படுகிறது. ஆடல் என்பது தமிழர் பண்பாட்டில் பொழுதுபோக்காக மட்டுமல்லாது, சமயச் சடங்குகளின் ஒரு பகுதியாகவும் இருந்தது.

சோழர் காலம் (கி.பி. 9–13ஆம் நூற்றாண்டு) தமிழர் கலை வரலாற்றில் சிற்பக் கலை உச்சம் பெற்ற காலமாகக் கருதப்படுகிறது. கோயில்கள் ஆன்மிக வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது, கலை, இலக்கியம், இசை மற்றும் நடனத்தின் மையங்களாகவும் விளங்கின. இக்காலத்தில் உருவான ஆடற்சிற்பங்கள் (Dance Sculptures) நடனக் கலையின் இயக்கத்தையும், சமய தத்துவத்தின் ஆழத்தையும் ஒருங்கிணைத்த காட்சிப் பதிவுகளாக உள்ளன. நடராஜர், கரணச் சிற்பங்கள், தேவதாசி வடிவங்கள் போன்றவை சோழர்கால ஆடற்சிற்பங்களின் முக்கிய கூறுகளாகும். இவை பரதநாட்டியத்தின் அடிப்படை இலக்கணங்களான கரணங்கள், அங்க சுத்தி, ரச வெளிப்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. நாட்டியசாஸ்திரம், சிலப்பதிகாரம், தேவாரம் போன்ற நூல்களுடன் இச்சிற்பங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வது தமிழர் பண்பாட்டின் ஒருங்கிணைந்த தன்மையை விளக்க உதவும். அந்த வகையில் 'சோழர்கால ஆடற்சிற்பங்கள்' என்ற தலைப்பினூடாக ஆடற்கலை வளர்ச்சிக்கு சோழர்கால சிற்பங்கள் சான்று பகரும் விடயங்களையும் கருத்துக்களையும் நுட்பங்களையும் ஆராய்ந்து அவற்றை எடுத்துக் கூறுவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the Study)

1. சோழர்கால ஆடற்சிற்பங்களின் கலைச் சிறப்புகளை ஆய்வு செய்தல்.

2. ஆடல் மற்றும் சிற்பக் கலை ஒன்றிணையும் முறையை விளக்குதல். 3. நாட்டியசாஸ்திரம், சிலப்பதிகாரம், தேவாரம் ஆகிய இலக்கியங்களுடன் ஒப்பீடு செய்தல்.

3. நடராஜர் வடிவத்தின் தத்துவப் பொருளை ஆராய்தல்.

4. பெண் ஆடற்சிற்பங்கள் மற்றும் தேவதாசி மரபின் சமூகப் பங்கை மதிப்பீடு செய்தல்.

5. இன்றைய நடனக் கலை பயிற்சி மற்றும் கலை ஆய்வுகளுக்கு சோழர்கால ஆடற்சிற்பங்கள் தரும் பங்களிப்பை சுட்டிக்காட்டுதல்.

## இலக்கிய மீளாய்வு (Literature Review)

- டாக்டர் இரா. நாகசாமி – சோழர் சிற்பங்களில் கரணங்களின் பயன்பாடு குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.
- ஆனந்த குமாரசுவாமி – இந்தியக் கலை மரபில் நடராஜர் வடிவத்தின் தத்துவப் பொருளை விளக்கியுள்ளார்.
- பரதமுனி – நாட்டியசாஸ்திரம் – ஆடல் இலக்கணத்திற்கான அடிப்படை நூலாக இருந்து சோழர் சிற்பங்களுக்கு இலக்கண ஆதாரமாக விளங்குகிறது.
- சிலப்பதிகாரம் – ஆடல், இசை, அரங்கேற்றம் பற்றிய விவரங்கள் சிற்பங்களுடன் ஒப்பிடும் போது ஒற்றுமை காணப்படுகிறது.
- தேவாரம், திருவாசகம் – சிவனின் ஆனந்தத் தாண்டவக் கருத்தை வலியுறுத்துகின்றன.

## ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும் (Need and Significance of the Study)

- சோழர்கால ஆடற்சிற்பங்கள் குறித்து தனித்துவமான முழுமையான ஆய்வுகள் குறைவாக உள்ளன.
- நடன இலக்கணம் மற்றும் சிற்பக் கலை

இடையிலான தொடர்பு போதிய அளவில் தொகுக்கப்படவில்லை.

- இவ்வாய்வு தமிழர் பண்பாட்டு மரபை ஆவணப்படுத்த உதவும்.
- இன்றைய பரதநாட்டிய பயிற்சி மற்றும் கலை ஆய்வுகளுக்கு வரலாற்று ஆதாரமாக அமையும்

**ஆய்வின் வரம்புகள் (Scope of the Study)**

- கி.பி. 9–13ஆம் நூற்றாண்டு சோழர் காலம் மட்டும்.
- தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சோழர் கோயில்கள் (சிதம்பரம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம்).
- கல் மற்றும் வெண்கல ஆடற்சிற்பங்கள்.

**ஆய்வு முறைகள் (Research Methodology)**

- வரலாற்று ஆய்வு முறை
- விளக்க மற்றும் ஒப்பீட்டு ஆய்வு

**சோழர்கால ஆடற் சிற்பம்**

சோழர்கள் ஆடற் கலையைப் போற்றி வளர்த்தனர் என்பதனை ஆடல் வல்லான் ஆனந்த கூத்தாடும் திருத்தலங்களின் ஆடற் சிற்பங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்"

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் பலருடைய நாவிலும் பாட்டாகத் வைக்கப்பட்டுவிட்டது. இந்தப் பாட்டுடைத் தலைவன், பக்தர்களை மகிழ்விக்க என்றென்றும் நடனமாடிக் கொண்டிருக்கும் திருக்கோவில் சிதம்பரம் வைணவருக்குத் திருவரங்கம் "கோவில்" என்பது போல சைவருக்குக் கோவில் சிதம்பரம் இது தில்லை என்றும் அழைக்கப்படுகின்றது. தவவலிமையால் மிகவும் செருக்குற்றிருந்த தாருகாவனத்து முனிவர்களை அடக்க சிவபெருமான் பிட்சாடனராகவும், திருமால் மோகினியாகவும் வேடமிட்டு அங்கு சென்றனர். முனிவர்கள் ஒரு யாகம் செய்து அதில் ஒரு புலியை உண்டாக்கி சிவபெருமான் மீது ஏவினார்கள். அவர் அதன் தோலை உரித்து ஆடையாகப் போர்த்துக் கொண்டார். பின் சீறிப் பாய்ந்த பாம்பை அணிகலனாக கழுத்தில் அணிந்தார். முயலகன் என்ற ஒரு சிறிய உருவத்து அசுரனும் யாக குண்டலத்திலிருந்து எழுந்து வந்து எதிர்த்தான். அவனைக் காலடியில் போட்டு மிதித்தபடி நடனமாடத் தொடங்கினான் ஈசன். அந்த நடனத்தைக் கண்டுகளித்த திருமால் அதை ஆதிசேடனிடம் விவரித்தார். ஆதிசேடனின் வழியே அது பற்றி கேள்வியுற்றார்கள். பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இரு முனிவர்கள் அவர்களுக்கும் அந்த நடனத்தைக் காண ஆவல் உண்டாகியது. காசியிலிருந்து தென் திசைக்கு வந்தவர் வியாக்கிரமபாதர் என்ற புலிக்கால் முனிவர் பூசைக்காக வண்டு தொடும் முன் மலர்களை விரைந்து பறிக்க விரும்பிப் புலிக்கால்களையும், புலியின் கண்களையும் வரமாக வேண்டிப் பெற்றவர் இவர். தில்லைக் காட்டின் நடுவே எழுந்திருந்த சுயம்பு லிங்கத்தைக் கண்டு அதை வணங்கி வந்தார். அங்கு வந்து சேர்ந்த பதஞ்சலி என்ற முனிவரும் இவரும் சிவனின் ஆனந்த நடனத்தைப் பற்றிக் கேள்வியுற்று அதைக் காணத் தவமியற்றினார். அந்த தவத்திற்கு இரங்கி அந்த நடனமாட சிவபெருமான் வந்தபோது அங்கிருந்த தில்லைக்காளி அவரை நடனமாடவிட மறுத்தாள். இறுதியில் இருவருமே போட்டியிட்டு ஆடுவதென்றும் போட்டியில் தோற்பவர் ஊரைவிட்டே போய்விடுவது என்றும் முடிவாகியது. வலது காலைத் தூக்கி ஊர்த்துவ தாண்டவமாடி சிவபெருமான் காளியைத் தோற்கடித்தார். இந்த நடனத் தோற்றம் இன்றும் நிருத்த சபையில் காணப்படுகின்றது. தோற்றுப்போன காளி ஊருக்கு வெளியே இப்போது இருக்கும் அவளுடைய கோவிலுக்கு இடம்பெயர்ந்தாள். சிவகாமசுந்தரி, ஏனைய கடவுளர்கள், முனிவர்கள் மற்றும் பதஞ்சலி, வியாக்கிர பாதர் ஆகியோர் முன்னிலையில் ஆனந்த தாண்டவம் ஆடி அவர்களை மகிழ்வித்தார். இறைவன் அத்தோடு அந்தத் தாண்டவத்தைப் பொன்னம்பலத்தில் என்றென்றும் ஆடுவதாகவும் வாக்களித்தார். இதுவே இக்கோயிலின் புராண வரலாறு ஆகும்.

இது ஆடல் பற்றிய செய்தியைக் கூறுவதாகவே காணப்படுகின்றது. இவ்வரலாறு நிருத்த சபையில் சிற்பமாகக் காணப்படுகின்றது.

"மேலும் வடக்குக் கோபுரத்திலே ஆடற் கரணம் ஒன்றும் காணப்படுகின்றது. அதுமட்டும் அல்லாது ஆடற்கரணங்களின் நடுவே சிவபெருமானும் உமையன்னையும் உள்ள சிற்பமும் உண்டு".

நடராஜர் சிற்சபையில்,

"கற்பனைக் கடந்த சோதி கருணையே யுருவமாகி

அற்புதக் கோலநீடி யரு மறைச் சிரத்தின் மேலஞ்

சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துனின்று"

ஆனந்த நடனம் புரிகிறார். பக்கத்தில் சிவகாமி அம்மை நின்கிறார். "இந்த நடனத்தின் போது இறைவனின் ஐந்து தொழில்கள் நடைபெறுகின்றன என்பார்கள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவை அவை. உடுக்கையில் ஆக்கலும், அபயகரத்தில் காத்தலும், தீயின் சுடரில் அழித்தலும், தூக்கிய பாதத்தில் மறைத்தலும், நீட்டிய கரத்தில் அருளலும் நிகழ்த்துகின்றார். இவ்வாறான சிற்பம் சிற்சபையில் காணப்படுகின்றது". அதுமட்டும் அல்லாது கொடிக்கம்பத்தருகே இருக்கும் நிருத்த சபை ஆடவல்லானின் தேராக கருதப்படுகின்றது. ஒவ்வொன்றும் எட்டு அடி உயரமே இருக்கும். செதுக்கப்பட்ட 56 தூண்கள் நிற்கும் மண்டபம் இது. ஒரு தேரின் உருவத்தில் குதிரைகள் அதை இழுப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. குதிரையின் பின்னால் தேரின் சக்கரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. "நடனமாடும் பெண்களின் சிற்பங்கள் மிகுந்த இந்த மண்டபத்தின் கருவறையில் வலது காலை தலைக்கு மேல் தூக்கிய படி ஊர்த்துவ தாண்டவம் ஆடும் சிவபெருமானின் சிலை உள்ளது." கீழே தில்லைக்காளி காணப்படுகின்றாள்.

கிழக்குக் கோபுரத்தின் இருபுறமும் கணபதி, சுப்பிரமணி ஆகிய இருவரின் சந்நிதிகள் உள்ளன. இந்தக் கோபுரம் மற்ற மூன்று கோபுரங்களை விட அதிக சிற்பங்களைக் கொண்டுள்ளதுடன் காலத்தாலும் முற்பட்டது. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் திருப்பணி செய்யப்பட்டு, அவனது சிலையும் கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ளது. உட்புற வாயில் கலைகளின் சுரங்கம் என வர்ணிக்கப்படுகிறது. இங்கு பரதரின் நாட்டிய சாஸ்திரத்திலுள்ள 108 கரணங்கள் சிறு ஓவியங்கள் போல் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காட்சியின் மீதும் கரணத்தின் பெயரும் வெட்டப்பட்டுள்ளது. இந்தக் கரணங்கள் கோவிலின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

தெற்குக் கோபுரம் கல்வெட்டுகளில் செக்கச்சியன் எழுநிலைக் கோபுரம் என்று குறிக்கப்படுகின்றது. இதை எழுப்பிய மூன்றாம் குலோத்துங்கனின் மருமகனாகிய இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் சுந்தரபாண்டியன் திருக்கோபுரம் என்று சாசனங்களில் குறிப்பிடப்படும் மேற்குக் கோபுரம் சடைவர்மன் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது. இங்கு நாட்டிய கர்ணங்கள் காணப்படுகின்றன. மேலும், ராஜராஜ சோழனால் அமைக்கப்பட்ட இராஜராஜேஸ்வரத்து கருவறை தாழ்வாரத்தில் வெறும் தரையில் ஆடும் நடராஜன் காணப்படுகின்றார். இந்த சிற்பத்தின் சில பகுதிகளில் வண்ணம் இன்றளவும் இருக்கிறது. கோவிலின் முக்கிய பகுதி முழுக் கோவிலுமே ஒரு தனித்தன்மையும் ஒரு வடிவத்தையும் பெறும் பகுதி கோவிலின் விமானம் தான். இது தரை மட்டத்திலிருந்து 216 அடி உயரத்தில் மேல்நோக்கி நிற்கிறது. இரண்டு அடுக்குகளைக் கொண்ட கருவறை அடிப்பாகத்தில் 98 அடி அகலம் கொண்ட சதுர அமைப்பு அடுக்குகள் இடையே கொடுங்கைகள் துருத்திக் கொண்டிருக்கின்றன. முதல் நிலையில் தேவகோட்ட மாடங்களில் சிவபெருமானின் 28 முழு உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிவனின் பலவித தோற்றங்கள், இரண்டாவது நிலையில் முதலாவது நிலையிலிருக்கும் சிலைகளுக்கு நேர்மேலே திரிபுராந்தகராகத் தோன்றும் சிவனின் சிலைகள் வெவ்வேறு பாவங்களில் நிற்கின்றன.

மேலும் ராஜராஜரின் ராஜராஜீசுவரத்திலும் தொடர்ந்தமைத்த பெருவிமானங்களிலும் உயரமான துணைத்தளங்கள் கட்டப்பட்டன. கோபுரங்களிலும் இதுபோன்ற துணைத்தளங்கள் அமைந்தன. இராஜராஜீசுவரத்து ராஜராஜன் திருவாசல் துணைத்தளம் குறிப்பிடத்தக்கது. இதில் பல சிவபுராணக் காட்சிகளும் கண்ணப்பர் வரலாறும் இடம்பெற்றுள்ளன. நக்கீரதேவ நாயனாரின் திருக்கண்ணப்பதேவர் திருமறத்தைப் பின்பற்றிக் கண்ணப்பர் வரலாறு அமைந்துள்ளது. இறைவனுக்கு உடும்பைப் படையளிப்பதும், அமர்ந்த நிலையில் கண்ணகழ்வதும், லிங்கக் கை தடுப்பதும் அரிய காட்சிகளாகும். அதுமட்டுமல்லாது விமானத் தூண்களின் மாலைத் தொங்கல்களில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் பஞ்சநதீசுவரர், ராஜராஜேசுவரர் மண்டபத் தூண்களின் மாலைத் தொங்கல் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் பலவகையான ஆடற் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. "ஊர்த்வஜானு, விருச்சிகம், அர்த்த சுவஸ்திகம் முதலிய கரண கோலங்களும் ஊர்த்துவ தாண்டவ வடிவங்கள், ஆனந்த தாண்டவ வடிவங்களும் கலைநயத்தோடு சித்தரிக்கப்பட்டுள்ளன".

"நாட்டியச் செயல் யாவையும் சிவனது நடனம்

பாட்டிசைத் திறன் யாவையுமன்னதே"

அதாவது நடனமும் இசையும் சிவபெருமானுக்குரியவை. எனவே சோழர் காலத்துக் கோவிற் கிரியைகளிலே நடனம் ஒரு அம்சமாக இடம்பெற்றது. அரசர்களும் நடனக் கலையைக் கற்றனர். "ராஜராஜ சோழனின் மகள் குந்தவை நடனம் கற்றாள். அவளது தங்கையும் நடனம் கற்றாள் என்பதை உணர்த்த ரவிகுல மாணிக்க ஈஸ்வரர் கோவிலிலே ராஜராஜனின் தங்கை நடனமாடுவது போன்ற சிற்பமுண்டு. மேலும் சோழர் காலத்துக் கோவில்கள் நடனக் கலையின் நிலைகளன்களாய் விளங்கின. தஞ்சை பெருவுடையார் கோவிலில் நடனமாதர் உருவங்கள் சில காணப்படுகின்றன. தேவலோக மாதர்களின் நடன நிகழ்ச்சிகளையும் பூலோக மாதர்களின் நடன நிகழ்ச்சிகளையும் சித்தரிப்பனவாய் உள்ளன. இவை நாட்டிய சாஸ்திரத்தை பின் பற்றியே காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாது நாட்டிய சாஸ்திரம் கூறும் 108 கரணங்களுள் தலபுஷ்பபுடம் முதல் கபித்தம் வரையிலான 81 கரணங்களை சிவபாத சேகரன் எனும் விருதினைப் பெற்ற இராஜராஜ சோழன் தஞ்சை இராஜராஜேஸ்வரத்தில் வரிசையாக செதுக்கினான். துரதிஷ்ட வசமாக எஞ்சியுள்ள 27 கரணங்களை அமைக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பினும் அமைக்க முடியவில்லை. இவனுக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப் பின் கும்பகோணம் சாரங்கபாணி கோயில் கோபுரத்தில் நான்கு திசைகளிலும் இக்கரணச் சிற்பங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

நாட்டிய சாஸ்திர பின்னணியில் அமைந்த இவை மொத்தம் 106 சிதம்பரக் கோவிலின் கோபுரத்தில் 108 கரணங்களும், அவற்றிற்கான நாட்டிய சாஸ்திர செய்யுட்களும் நேர்த்தியாக பரதவல்லன், பரதார்ணவகரணதுரீணன் போன்ற சிறப்பு பெயர்களைப் பெற்ற கோப்பெருஞ்சிங்கன் எனும் அரசனால் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து விருத்தாசலம் விருத்தகிரீசன் ஆலயம், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயம் ஆகிய கோயில்களிலும் இராஜராசன் துவக்கிய மரபை ஒட்டி 108 கரணங்கள் கோவில்களில் அமைக்கப்பட்டுள்ளன. மதுர காளியம்மன் கோயில் விமானத்தின் தாங்குதளப் பகுதியில் நாற்புறத்தும் 18 கரணச் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, புள்ளிமங்கை ஆலந்துறையார் கோயில், மேலப் பெரும்பள்ளம் வலப்புரநாதர் கோயில், பொன்செய் நல்துணையீசுவரர் கோயில், கும்பகோணம் நாகேசுவரர் கோயில், திருநாவலூர் திருத்தொண்டீசுவரர் கோயில், திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில், திருச்சின்னம் பூண்டி திருச்சடைமுடிநாதர் கோயில்" போன்ற இடங்களில் சோழர் காலத்தில் செதுக்கப்பட்ட பல கரணச் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிறப்பாக ஊர்த்துவஜானு கரணத்தைச் சிவபெருமான் நிகழ்த்துவது போலமைந்த சிற்பங்கள் பல சோழர் காலத் திருக்கோயில்களில் காணப்படுகின்றன.

மேலும் கிராமம் சிவயோகநாத சுவாமி

கோயில் கண்ட பாதச் சிற்பங்களுள் விஷ்ணுவின் குடக்கூத்து சிற்பம் அரிய சிற்பமாகும். இது அடியார்க்கு நல்லார் கூற்றுப்படியே பல குடங்களை வீசிக் குடக்கூத்தர் ஆடுமாறு செதுக்கப்பட்டுள்ளது. ஆடுவோரின் வலமேற்கையில் இரண்டு குடங்களும், இடமேற்கையில் ஒரு குடமும், வலக்காலில் கொண்டைப் பகுதியில் ஒரு குடமும், இடமுழங்காலருகே ஒரு குடமும் காட்டப்பட்டுள்ளது. கூத்தரின் இரு புறமும் சாமரங்கள் காட்டப்பட்டுள்ளன. இக்குடக் கூத்து ஏறத்தாழ இருபதுக்கும் மேல் சோழர் கோயில்களில் ஆடவர் ஆடுவது போலவும் மகளிர் ஆடுவது போலவும் காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. திருப்புறம்பியம் சாட்சீசுவரநாதர் கோயில் கண்டபாதத்தில் வலக்காலை உயர்த்தி புஜங்கத்திராசிதம் காட்டும் சிவபெருமானின் அரிய சிற்பம் இடம்பெற்றுள்ளது. திருச்சென்னம் பூண்டி குறிப்பிடத்தக்க சிவ கரணத் தோற்றங்களைத் சிற்பங்களாகக் கொண்டுள்ளது. செம்பியன் மாதேவி திருப்பணிகளான திருமயானம், திருக்கோடிக்காவல், கோனேரிராஜபுரம் சிவன் கோவில்களிலும் சிவபுராண, சிவநடனச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் நாட்டிய கரணங்கள் அர்த்த மண்டபத் தூண்களில் மாலாஸ்தானத்தில் ஊர்த்துவஜானு, சூசிவித்தா, அர்த்த ஸ்வஸ்திக கரணங்களில் பெண்களின் சிற்பங்கள் எழிற்படச் செதுக்கப்பட்டுள்ளன. இத் தோற்றங்களுள் ஒன்று இதே கோயிலில் தாங்கு சிற்பமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குழு நடனங்களும், தனியார் ஆடல் தோற்றங்களும் தஞ்சாவூர் இராஜராஜீசுவர ஓவியக் காட்சியில் இடம்பெற்றுள்ள பிரம்மரக கரணத்தின் முன்னோடித் தோற்றமும் இத்தூண்களில் ஸ்தானப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. நல்துணை ஈசுவரத்தின் அர்த்த மண்டப வாயிலருகில் உள்ள அரைத்தூணின் மாலை தொங்கல், ஸ்தானப் பகுதியில் மூன்று ஆடற்காட்சிகள் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஸ்தானப் பகுதியில் சுடர்முடிக் காளியின் அர்த்த சுவஸ்திகம் முழு ஆடலாய் மலர்ந்துள்ளது. கீழே பெண் கலைஞர்கள் குழல் வாசிக்க, இரண்டு காரிகைகளின் அர்த்த ஸ்வஸ்திகம் இந்த சிற்பங்களின் அழகை, ஆடல் அசைவுகளின் நயத்தை மெய்ப்பாட்டு அற்புதத்தைச் சொற்களால் சிறைப்பிடிக்க முடியாது. புல விமானத் தூண்களில் இது போன்ற ஆடற் சிற்பங்கள் இடம்பெற்றிருந்தாலும் பிரம்மபுரீசுவரத்து, நல்துணை ஈசுவரத்துச் சிற்பங்களுக்கு அவை ஈடாகா.

மேலும் சோழர் காலத்தில் பலவித நடன சாலைகள் அமைத்து அவற்றின் மூலம் நடனக் கலையினை வளர்த்தான். தஞ்சை பெரிய கோவிலின் நடனசாலை பற்றி கருவூர்த்தேவர் இராசராசேச்சரத் திருப்பதிகத்தில்,

"மின்னெரும் புருவத்தின் மயிலனையார் விலங்கல் செய் நாடகசாலை இன் நடனம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரத்திவர்கே". என்கிறார். இதிலே பல நடன மாதர்களின் உருவச் சிலைகளும், பக்க வாத்தியங்களும் காணப்படுகின்றன.

கங்கையும் கடாரமும் வென்ற தமிழ் மன்னனின் வெற்றித் திருநகரம். ராஜராஜன் என்ற மாமன்னன் ராஜராஜீஸ்வரம் என்ற உலகப் புகழ்கொண்ட கோவிலைத் தஞ்சையில் கட்டி இசைப்பட்டான். அவன் வழியில் அவனுடைய பெருமை மிக்க மகன் ராஜேந்திர சோழதேவன் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவிலைக் கட்டி அழியாப் புகழ் கொண்டான். நீண்ட காலம் வரை இதுவே சோழரின் தலைநகராக இருந்திருக்கிறது. ராஜேந்திரன் எழுப்பிய கோவில்களுள் தலைசிறந்ததாக அவன் புகழ் பரப்பிக் கொண்டிருப்பது கங்கை கொண்ட சோழபுரத்தில் தன்னுடைய பேரரசின் புதிய தலைநகரில் அவன் கட்டிய பெரிய நாயகரின் கோவில் ஆகும். இது தஞ்சாவூரின் ராஜராஜீஸ்வரம் போன்ற மாதிரி வடிவத்தில் ஆனால் சற்று சிறிய உருவில் கட்டப்பட்டிருக்கின்றது.

தஞ்சை பெரிய கோவில் ஆண்மையின் ஆற்றலோடு வீறு கொண்டு எழுந்து விண்ணைக் கிழிப்பது போல் நிற்கும். ஆனால் கங்கை கொண்ட சோழபுரம் கோவில் அந்த அளவு பெரிதாக இல்லாமல் ஒரு மென்மையான

வடிவில் கட்டப்பட்டதாக தோற்றம் தரும். பெர்சி பிரவுன் என்ற மேலைநாட்டு அறிஞர் இந்தக் கோவில் தஞ்சைப் பெரிய கோவிலின் பெண் வடிவம் என்று சொல்லுவார். இங்கும் பலவிதமான ஆடல் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கோவில் முழுவதும், விமானத்திலும், கருவறைச் சுவர்களிலும், சிற்பங்களும் தூண்களும் மிகவும் அழகுறச் செதுக்கப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டு உரிய இடங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன. இவை கோவிலுக்கு அழகு சேர்ப்பதோடு முறையான வழிபாட்டிற்கும் வழிவகுக்கின்றன. கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பங்கள் தஞ்சைக் கோவில் சிற்பங்களை விட கலை அழகு மிக்கவை. சோழர் காலத்துச் சிற்பி அசுரர்கள் போல் கற்பாறைகளை செதுக்கத் தொடங்கி பொற் கொல்லர்கள் போன்று மிகவும் நுணுக்கமான சிற்பங்களை முடித்து வைப்பார்கள் என்று சொல்வார்கள். தமிழ் நாட்டுக் கலைஞர்களின் கையில் நெங்கு விடாப் பாறைகள் கூட களிமண் போன்று வளைந்து கொடுத்திருப்பதை கங்கை கொண்ட சோழபுரத்திலே காணலாம். இந்த கல் வடிவங்களில் சிற்பிகளின் உயர் மூச்சே செலுத்தப்பட்டு அந்த சிற்பங்கள் சுவாசிப்பது போன்ற ஒரு தோற்றத்தை தருகின்றது. கருவறையின் சுவர் முழுவதும் இப்படி உயிரோவியங்களாக 42 அழகிய நடன பெண்களின் சிலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் கருத்தைக் கொள்ளை கொள்பவை நடராசர், சண்டேசுர அனுக்கிரக மூர்த்தி, சரசுவதி ஆகிய மூன்று சிலைகளுமே. இவை காலத்தை வென்று இன்றும் அழகோடு மிளிர்கின்றன. மேலும் ஆடற்கரணங்கள் பலவும் காணப்படுகின்றன. இவ்வாறு கங்கை கொண்ட சோழபுர ஆடற் சிற்பங்கள் இன்றும் அழியாமல் ஆடலை வளர்த்து வருகின்றது.

இக்காலத்தில் நடனக்கலையானது கோயில்களிலே நடனமாந்தரினூடாகவே வளர்ந்து பேணிக்காக்கப்பட்டு வந்துள்ளது. நாட்டியக்கலை வளர்ச்சியிலே கோயில் நடன மாந்தரின் பங்கு மிகவும் போற்றப்பட்டது. இவர்கள் இறைவனுக்கு நாட்டியம் மூலம் சேவை செய்ததால் தேவரடியார் என்றழைக்கப்பட்டனர். இவர்களது உருவச் சிலைகள் பல கோயில்களில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

மனித வரலாற்றிலே கலைகள் ஒரு முக்கியமான இடத்தை வகித்து வந்துள்ளன. அவை மக்களை வழிப்படுத்தியும், செம்மைப்படுத்தியும் வளர்ந்துள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆதிகாலம் தொட்டு தமிழர் வாழ்விலே வாழ்வியலோடு ஒன்றிணைந்து இக்கலைகள் வளர்க்கப்பட்டன. இக் கலைகளிலே ஆடற்கலையும் ஒன்றாகும். ஆண்களோ, பெண்களோ கவர்ச்சிகரமாக ஆடி மக்களை மகிழ்வித்த ஆடற்கலைக்கு சிற்பிகள் கலைத்திறனையும், கற்பனை திறனையும் பயன்படுத்தி சிற்பங்களாக அழியாத நிலையளித்துள்ளனர். நடனமாடும் நடனக்கலைஞர் போலன்றி அசைவற்ற, அழியாத நிலையிலுள்ள நடன சிற்பங்கள் தோன்ற வழிகோலப்பட்டது. நடனமாடும் நடனக்கலைஞர் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் அக் கலையின் பல்வேறு கோலங்கள் இன்றும் எமக்குக் கிடைக்கும் பாங்கில் இவ் ஆடற் சிற்பங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அந்த வகையில் சங்ககாலச் செய்திகளை இன்றும் நாம் அழியாத நிலையிலுள்ள சிற்பங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். அவை அழியாமல் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது, சங்ககால ஆடலுக்கு சான்றாக அமைவது ஆடற் சிற்பங்களேயாகும். ஆடலின் புனிதத் தன்மையை இன்றுவரையும் பாதுகாக்கப்படுவதை சிற்பங்கள் வாயிலாக அறியலாம். இவ்வாறு சோழர் காலப்பகுதியில் கோயில்களின் சிற்பங்கள் மூலம் பரதநாட்டியமானது வளர்க்கப்பட்டது. சோழர்கால ஆடற்சிற்பங்கள் தமிழர் கலை, பண்பாடு, ஆன்மிகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக விளங்குகின்றன. அவை காலத்தை வென்ற காட்சிக் கல்வெட்டுகளாக இருந்து இன்றும் உலகக் கலை ஆர்வலர்களை கவர்ந்து வருகின்றன.

## References

Karthika Ganesar. (1979). “Natyakalai through the ages”, *Express Newspaper*. Colombo.

Kothandaraman., P. (2009). *Indian Arts, (Painting, Sculpture*, *Dance).* New Century Book House.

Sargunaraja, A., S. (2001). *Puthiya Chithirakkalai*. S Print, Payn Lane.

Jayarasa, S. (1999). *Aadal Azhagiyal*. Posco Nallur.

Sivachamy., V. (2005). *Bharatakalai*. Finegraphics.

Sivachamy, V. (2011). *Bharatakalai*. Poopalasingam Bookshop.

Navarathinam, K., (2006). *South Indian Sculpture Forms*. Kumaran Puthaka Illam.

Nagasamy., Ira. (2004). *Tamil Nadu Temple Arts*. Tamil Nadu Government Archeology Department Publication.

Neelakanda Sastri, K., A. (2009). *The Cholas*. New Century Book House.

Pathmanathan, C. (2001). *Hindu Cultural Temples and Sculptures*, Uniarts Private Limited.

Balasubramaniam. (1987). *Kudavayil, Sculptures and Paintings of Historical Leaders of the Chola Mandal*. Lali Press.

Mounaguru, Si. (1997). *Art and Literature Article*. Pari Nilayam.

Ragavan, Ve. (1999). Natyakalai, Kalaimagal Kariyalam, Mylapore, Chennai 4

Jeelambikai Selvaraja, (2011) *Natanasaram*. Uniarts Private Limited.

Jeelambikai Selvaraja. (2008). *Aadarkalai*. Gowri Printers.

Vaithiyalingam, Se. (2003). *Sirpakkalai*. Meippan Pathippagam.

Srirama Desikan, S., N. (2011). *Bharatanatya Sasthiram*. Uniarts Private Limited.

Srirama Desikan, S., N. (2011). *Bharatakalai Kalanjiyam*. Appar Achagam.